**OS NO.124/2017** **Date: 22.07.2025**

ரமேஷ் (DW2)

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் 1ம் பிரதிவாதிக்கு எந்த தேதியில் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் 1ம் பிரதிவாதிக்கு அதிகார பத்திரம் எழுதிகொடுத்த தேதி, வருடம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டிருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் வாதிக்கு அனுப்பவில்லை, 1ம் பிரதிவாதிக்கு தான் அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–7 வழக்கறிஞர் அறிவிப்பு நான் வாதிக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். 2017ல் வா.சா.ஆ–7 எதற்காக வாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அறிவிப்பு அனுப்பவுதற்கு முன்பு அழைப்பாணை வந்ததால் அவருக்கு அனுப்பினேன். நான் அறிவிப்பு அனுப்புதற்கு முன்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா அல்லது அறிவிப்பு அனுப்பிய பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார். வா.சா.ஆ.7 அறிவிப்பில் என்ன சங்கதிகள் குறிப்பிட்டிருந்தேன் என்றால் எனக்க சரியாக ஞாபகம் இல்லை. வா.சா.ஆ–7ல் மனோகரன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை இரத்து செய்வதாக குறிப்பிட்டிருந்தேன் என்றால் அதை பார்த்து தான் சொல்ல முடியும். நான் மனோகரனுக்கு 2015ல் பொது அதிகார பத்திரத்தை எழுதிக்கொடுத்தேன் என்றும் 2017ல் தான் நான் அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை, நான் வழக்கு

தொடர்வதற்கு பிறகு தான் அறிவிப்பு அனுப்பினேன். வாதி எப்போது வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் **2017**ல் அழைப்பாணை எனக்கு வந்தது, தேதி சரியாக ஞாபகம் இல்லை. நான் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு தாவா சொத்து குறித்து வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் அதை காண்பித்து கேட்டால் சொல்கிறேன். நான் இந்த வழக்கில் **30.12.2017**ல் அழைப்பாணை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அஞ்சல் ஒப்புகை அட்டை எதற்காக வந்தது என்று எனக்கு தெரியாது, அந்த அழைப்பாணையை காண்பித்தால் சொல்கிறேன். நான் தாவா சொத்து குறித்து வில்லங்கம் போட்டு பார்த்த பிறகு தான் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் **25.10.2017**ல் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். நவீன் குமார் தாக்கல் செய்த வழக்கிற்கு நான் வழக்கறிஞர் மூலம் பதிலுரை அனுப்பினேன். நான் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு பதிவு அலுவலகத்தில் தாவா சொத்து குறித்து வில்லங்கம் போட்டு பார்த்துள்ளேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழில் பொது அதிகார பத்திரம் **06.11.2017**ல் ரத்து செய்ததாக உள்ளது என்றால் சரிதான். **07.10.2015** அன்று **1**ம் பிரதிவாதிக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்ததாக மேற்படி வில்லங்க சான்றிதழில் உள்ளது என்றால் சரிதான். அந்த வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள எவரஸ்ட் பைனாஸ் எந்த ஊரில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் பைனான்ஸ் நிறுவனம் உள்ள ஊர் பெயர் குறிப்பிடவில்லை. எவரஸ்ட் பைனான்ஸக்கும் எனக்கும் என்ன சம்மந்தம் என்றால் எனது தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கடன் கேட்டு மேற்படி பைனான்ஸ் நிறுவனத்திற்கு சென்றேன். நான் கடன் எவரஸ்ட் பைனான்ஸிடம் கடன் கேட்ட அந்த சமயத்தில் எனது தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கான மருத்துவ சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நவீன் குமார் என்பவர் எவரஸ்ட் பைனான்ஸ் நிறுவனத்தில் ஒரு பங்குதாரர் என்று எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எவரஸ்ட் பைனான்ஸில் மொத்தம் எத்தனை பங்குதாரர்கள் உள்ளார்கள் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எவரஸ்ட் பைனான்ஸில் நான் கொடுத்த வா.சா.ஆ–1 மற்றும் 2 எனது தகப்பனாருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் கடன் வாங்கும் போது கொடுத்தேன் என்றால் அந்த ஆவணங்களை மட்டும் கொடுக்கவில்லை, அதன் கூட தேதி மற்றும் பணம் நிரப்பாத இரண்டு காசோலை, ஒரு தேதி மற்றும் கடன் தொகை இல்லாத வெற்று கடனுறுதி சீட்டு கொடுத்தேன். நவீன் குமார் என்பவர் எவரஸ்ட் பைனான்ஸில் பங்கதாரராக இல்லை என்றால் சரியல்ல. 2016ல் பைனான்ஸில் கடன் பெறும்

போது என்ன ஆவணங்கள் கொடுத்தேன் என்பது எனக்க ஞாபகம் உள்ள நிலையில் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பதிலுரை, பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு ஞாபகம் இல்லை என்று கூறுகிறேன் என்றால் நான் கொடுத்த காசோலை மற்றும் கடனுறுதி சீட்டு வைத்து என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அதை எப்படி மறக்க முடியும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, பி.வா.சா.ஆ.2 பொது அதிகார பத்திரம், பி.வா.சா.ஆ-3 கிரய உடன் படிக்கை, பி.வா.சா.ஆ-4 பொதுஅதிகார பத்திரம் இரத்து செய்ததற்கான ஆவணங்களையும் நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மேற்படி 4 ஆவணங்களுக்கும் நவீன் குமாருக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தம் இல்லை என்றால் சம்மந்தம் இருக்கு. மேற்படி 4 ஆவணங்களில் ஏதாவது ஒன்றில் வாதியின் பெயர் உள்ளதா என்றால் கிரய ஒப்பந்தத்தில் வாதி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தரப்பில் நவீன் குமாரை குறுக்கு விசாரணை செய்யும் போது கிரய ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்த விவரம் குறித்து கேட்டுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ-6 ஒப்புதல் ஒப்பந்த பத்திரத்தில் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டது என்றும் நான் அதில் குறிப்பிட்டுள்ள பணத்தை பெற்றுக்கொண்டு கையெழுத்து போட்டுக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, அது போலி ஆவணம். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை, அது போலி ஆவணம், போலி கையெழுத்து. 26.11.2015 தேதியிட்ட பி.வா.சா.ஆ.5 கிரய ஒப்பந்த பத்திரத்தில் எனக்கு சேர வேண்டிய 23,95,000/-ல் 10,00,000 நான் பெற்றுக்கொண்டதாக உள்ளது என்றால் சரியல்ல, அந்த ஆவணம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியால்

தயாரிக்கப்பட்ட ஆவணம். இந்த நீதிமன்றத்தில் நான் கையெழுத்து செய்துள்ள குறுக்கு விசாரணை, வக்காலத்து மற்றும் மேற்படி பி.வா.சா.ஆ.5, பி.வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.4ல் உள்ள கையொப்பங்களை ஒப்பிட்டு பார்தால் ஒரே மாதிரியாக உள்ளதா என்றால் மேற்படி ஆவணங்களில் நான் கையெழுத்து போடவில்லை, அது வாதி மற்றும் 1ம் பிரதிவாதியால் போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் என்னுடைய பிரமாண வாக்குமூலம் ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல. வாதி என்ன பரிகாரம் கேட்டு என் மீது வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)